**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 07** **நாள் :06.01.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்திற்கு இடையூறாக நிறுத்தி வைக்கப்பட்டு அப்புறப்படுத்தப்பட்ட வாகனங்கள் மின்னணு ஏலம் விடப்பட்டு, பங்களிப்பு தொகை ரூ.1.60 கோடியை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் மாநகர காவல் ஆணையாளர் திரு.ஏ.கே.விஸ்வநாதன், இ.கா.ப., அவர்களிடம் வழங்கினார்.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சாலையோரங்களில் போக்குவரத்திற்கு இடையூறாக நிறுத்தி வைக்கப்பட்டு அப்புறப்படுத்தப்பட்ட வாகனங்கள் மின்னணு ஏலம் விடப்பட்டு, அதன் பங்களிப்புத் தொகை ரூ.1,60,20,804/– சென்னை மாநகர காவல்துறைக்கு கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தும் பணிக்காக பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் திரு.ஏ.கே.விஸ்வநாதன், இ.கா.ப., அவர்களிடம் 05.01.2019 அன்று வழங்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இரண்டு, மூன்று மற்றும் நான்கு சக்கர வாகன உரிமையாளர்கள் உபயோகமற்ற, பழுதடைந்த வாகனங்களை சாலையோரங்கள், நடைபாதைகள் மற்றும் தெருக்கள் ஆகியவற்றில் நிறுத்தி வைத்துள்ளதை தொடர்ந்து, வாகனங்களின் உரிமையாளர்கள் உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சாலைகள், நடைபாதைகள் மற்றும் தெருக்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அப்புறப்படுத்தப்படாத உபயோகமற்ற மற்றும் பழுதடைந்த 7,682 இருசக்கர வாகனங்கள், 90 மூன்று சக்கர வாகனங்கள், 103 நான்கு சக்கர வாகனங்கள் என மொத்தம் 7,875 வாகனங்கள் பெருநகர சென்னை காவல்துறை உதவியுடன் அப்புறப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாகனங்களில் மண்டலம்–1 முதல் 5 வரையுள்ள வடக்கு வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளில் அப்புறப்படுத்தப்பட்ட வாகனங்கள் இராயபுரம் மண்டலம், கோட்டம்–58, சூளை, அவதான பாப்பையா தெருவில் மலேரியா ஸ்டோர் அருகில் அமைந்துள்ள மாநகராட்சி இடத்திலும், மண்டலம்–6 முதல் 10 வரையுள்ள மத்திய வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளில் அப்புறப்படுத்தப்பட்ட வாகனங்கள் அண்ணாநகர் மண்டலம், கோட்டம்–107, மேயர் சத்திய மூர்த்தி சாலை, கெங்குரெட்டி சுரங்கப்பாதை அருகிலுள்ள மத்திய தார் கலவை நிலைய வளாகத்திலும், மண்டலம்–11 முதல் 15 வரையுள்ள தெற்கு வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளில் அப்புறப்படுத்தப்பட்ட வாகனங்கள் பெருங்குடி மண்டலம், கோட்டம்–188, வேளச்சேரி–தாம்பரம் சாலையில் அமைந்துள்ள பள்ளிக்கரணை பழைய குப்பை கொட்டும் வளாகத்திலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. மேலும் இவ்வாகனங்கள் எந்த வழக்குகளுடனும் சம்பந்தபடவில்லை அல்லது எந்தவொரு நீதிமன்ற நடவடிக்கையிலும் நிலுவையில் இல்லை என காவல்துறை மூலம் சான்று அளிக்கப்பட்டுள்ளன.

வட்டாரம் வாரியாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 7,875 வாகனங்களை பெருநகர சென்னை மாநகராட்சியானது மத்திய அரசு நிறுவனமான திருவாளர்கள் எம்.எஸ்.டி.சி. லிமிடெட் மூலம் மின்னணு ஏலம் நடத்தி தீர்வு செய்துள்ளது. இதன் மூலம் விற்பனை செய்யப்பட்ட அதிகபட்ச ஏலத்தொகை ரூ.2,21,45,006/– ஆகும். இதில் திருவாளர்கள் எம்.எஸ்.டி.சி. லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட சேவைக் கட்டணம் நீங்கலாக பெருநகர சென்னை மாநகராட்சி ஈட்டியத் தொகை ரூ.2,13,61,072/– மாநகர காவல்துறைக்கு வழங்கப்படும் 75 சதவீத பங்களிப்புத் தொகை ரூ.1,60,20,804/– ஆகும்.

மேற்கண்ட இப்பணியின் இரண்டாவது கட்டமாக 1,191 இருசக்கர வாகனங்கள், 39 மூன்று சக்கர வாகனங்கள், 11 நான்கு சக்கர வாகனங்கள் என மொத்தம் இதுவரை 1,241 வாகனங்கள் காவல்துறையால் பறிமுதல் செய்யப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சியால் பெறப்பட்டுள்ளது. விரைவில் இந்த வாகனங்களும் மத்திய அரசு நிறுவனமான திருவாளர் எம்.எஸ்.டி.சி. லிமிடெட் மூலம் மின்னணு ஏலம் நடத்தி தீர்வு செய்யப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வின்போது, துணை ஆணையர் (வ (ம) நி) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப, துணை ஆணையர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., துணை ஆணையர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., வட்டார துணை ஆணையர் டாக்டர் சுபோத்குமார், இ.ஆ.ப., கண்காணிப்பு பொறியாளர் (இயந்திரம்) திரு.எஸ்.பி.பாலசுப்பிரமணியம், மற்றும் செயற்பொறியாளர் (இயந்திரம்) திரு.ஆர்.ஏ.பிரபாகர் ஆகியோர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**